பொறுத்தவரையில், ஒருசில ஆலைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குள்ள பாக்கியை சரிசெய்யாமல் இருக்கின்றன. அவைகளின் மீது மாநில அரசு நடவடிக்கை எடுத்து, உடனடியாக பாக்கிகளை எல்லாம் கொடுத்துவிட வேண்டும் என்று உத்தரவும் பிறப்பித்து இருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் 'கட்டிங்' ஆர்டர் சரியான நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். கட்டிங் ஆர்டர் கொடுப்பதைப் பொறுத்த விஷயத்தில் வரிசைப்படுத்தி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலுள்ள கணக்கையும் ஆலைகளில் அரவை செய்கின்ற தேதிகளையும் கணக்கில் எடுத்து 'கட்டிங் ஆர்டர்' கொடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர வேறு எங்காவது தாமதம் ஏற்படுவதாக இருந்தால்— குறிப்பாக இந்த இடங்களில் தாமதம் ஏற்படுகிறது என்பதை என்னிடம் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்வேன் என்பதை தெரிவித்துக்கொள்வதோடு, லாரிகள் அனுப்புகின்ற விஷயத்தில் தாமதம் ஏற்படுகிறது. வெளியில், அதிகமான கட்டணம் கேட்கிறார்கள் என்ற குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கிறார்கள். இதையும் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கு தொடர்புடையதாகக் கேளுங்கள்....

திரு. ஜே. ஜேம்ஸ்: முந்தின கேள்வி தொடர்புடையதாக இருந்தது, இதில் கேள்விகள் கேட்க எனக்கு இடம் கொடுக்கப்படவில்லை. அதனால் தான் இப்போது கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை இதில் எப்படிக் கேட்க முடியும்? தயவு செய்து உட்காருங்கள்.

சோன நதியின் குறுக்கே பாலம்

*763 வினா—திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் உள்ள மணலூர்பேட்டையிலிருந்து மேலந்தல் செல்லும் வழியில் உள்ள சோன நதியின் குறுக்கே கரும்பு செஸ் நிதியிலிருந்து சிறுபாலம் அமைக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1978 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) ஆம். சோனந்தி ஓடையின் குறுக்கே சிறுபாலம் அமைக்க பிரேரணை ஒன்று பரிசீலனையில் உள்ளது. ரூ. 5 இலட்ச மதிப்பீட்டில் சிறுபாலம் அமைக்க ஒரு பிரேரணை கிடைக்கப் பெற்று நடப்பு தேதியில் உள்ள விலைப்பட்டியல் விகிதப்படி மதிப்பீடு கேட்கப்பட்டுள்ளது. திருச்சி கண்காணிப்பு பொறியாளர் (நெடுஞ்சாலை), (கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம்) மதிப்பீட்டை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

திரு. கோ. ரகோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, மூங்கில்துறைப்பட்டிலிருந்து மணலூர்பேட்டை வரை பாலம் கட்டாமல் இருபுறமும் சுமார் 7 லட்சம் ரூபாய் செலவில் பாதைகளை அமைத்திருக்கிறார்கள். இதனால் எந்தவிதமான பயனும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இந்தப் பாலத்தை உடனடியாக அமைத்து, ஏழு லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்ட சாலைகளை நல்லமுறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(விடை இல்லை)

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி ஆலையிலிருந்து—செஸ் நிதியிலிருந்து—தென்னாற்காடு மாவட்டத்திற்கு பெருவாரியான சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலையைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு மாவட்டத்திற்கும் சேர்ந்ததாக இருக்கிறது. ஆகவே வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பகுதிகளுக்கும் சேர்ந்து இந்த ஆலையின் செஸ் நிதியிலிருந்து சாலைகளை அமைக்கவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(விடை இல்லை)

கைத்தறித் துணி ஏற்றுமதிக்குப் பரிசு

*764 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கைத்தறித் துணிகளை பெருமளவில் ஏற்றுமதி செய்வோருக்கு பரிசுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்.

(ஆ) பரிசு வழங்கும் திட்டம் 1-1-75 முதல் 31-12-77 முடிய மூன்று ஆண்டுகளுக்கு அமுல் நடத்த ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. அதாவது 1974, 1975, 1976 ஆண்டுகளில் அதிகமான அளவில் பருத்தித்துணிகள், பட்டுத்துணிகள், பருத்தி ரெடி